தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

(கிழமை இதழ்)

தொகுதி-3] தி. பி. 2016 சிலை 7 (15-22-12-1985) 65 காசுகள் [இதழ் எண்: 67] [பகுதி 44 47

அறிவுக்குச் செவி சாய்க்காத - மக்கள் உணர்வுகளை மதிக்காத - நாட்டு நலன் கருதாத - மூடர்கள், தித்திருக்கர்கள், தந்நலமுள்ளவர்கள், அதிகார வெறியர்கள் ஆட்சியின் கீழ் நாடு சிக்கிச் சீரழிகிறது!

இயற்கையாகவே இதற்கு ஒரு முடிவும்-விடிவும் ஏற்பட்டாலொழிய வேறு வழியே இல்லை!

அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்தான் கூற்றாக முடியும்!

இல்லையானால்,-மக்கள் வெகுண்டெழுந்து மாபெரும் புரட்சியை நிகழ்த்தியாகவேண்டும்!

'இப்பொழுதுள்ள அரசியல் சூழ்நிலையில் எதையும் கேட்டுப்பெறமுடியாது; போராடித்தான் பெறமுடியும்' என்று நம்பிக்கையூட்டிய அனைத்துப் போராட்டத் தொழிலாளர் துறையினர்க்கும் நன்றி தெரிவித்துப் பாவலரேறு அறிக்கை!

இக்கால் அமைந்துள்ள அரசியல் அமைப்புச் சட்டங்களின்படி, கொடியவன், அல்லது கொடுமையானவன், அல்லது மூடன், அல்லது ஓர் அதிகார வெறிகொண்ட, தன்னலமுள்ளவன், அல்லது சூழ்ச்சியும் வஞ்சகமும் கொண்ட அரசியல் தித்திருக்கன் ஒருவன், அறிந்தோ-அறியாமலோ, கல்வியறிவற்ற கவர்ச்சிக்கு அடிமையான, ஏமாற்றுக்கு ஆட்பட்ட மக்களால், இப்பொழுதுள்ள அரசியல் சூதாட்டம் என்னும் தேர்தலில், தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பதவியில் அமர்த்தப் பெற்று, ஆட்சியின் அதிகாரங்களைக் கையகப்படுத்திக் கொள்வானானால், அவனை அங்கிருந்து, சிறிதே பெயர்த்துவிடுவது, அரிதினும் அரிதாகும்.

அப்படிப்பட்ட, அறிவுக்குச் செவி சாய்க்காத, மக்கள் உணர்வுகளை மதிக்காத, நாட்டு நலன் கருதாத மூடர்களும், தில்லுமல்லு பேசும் தித்திருக்கர்களும், முழுத் தந்நலமே வாயாக, அறிவாக, மனமாக, உடலாக அமைந்த பொய், புரட்டல்காரர்களும், அதிகார வெறியர்களுமே இன்றைக்குத் தமிழக ஆட்சியிலும், நடுவண அரசிலும் தங்களுடைய பணச் சாய்கால்லும், பதவி அதிகாரச் சூழ்ச்சிகளாலும் அமர்ந்து, ஒன்றுமறியாத ஏமாளி மக்களை ஆட்டிப் படைத்துக் கொண்டுள்ளனர், என்பதை நாட்டு நடப்புகளைத் தெளிவாக அறிந்த எவரும் மறுக்க முடியாது. அவர்களின் காலடியில் நாடும் ஆட்சியும் மக்களும் சிக்கி, மிதிபட்டுச் சீரழிந்துகொண்டு வருகின்ற காட்சி, கற்றவர்க்கும், மக்கள் நலம் கருதும் மற்றவர்களுக்கும் சொல்லவொண்ணாத் துயரை நாள்தோறும் மிகுத்து வருகின்றது.

இயற்கையாகவே இதற்கொரு முடிவும் - விடிவும் ஏற்பட்டாலொழிய, அத்தகையவர்களை ஆட்சியினின்று கீழே இறக்குவதற்கோ, அல்லது மாற்றுவதற்கோ வேறு வழியே இல்லை. 'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்தான் கூற்றாக' முடியும்! இல்லையானால், மக்கள் வெகுண்டெழுந்து மாபெரும் புரட்சி செய்து இவர்களை ஒழித்தால்தான் முடியும். அதுவரை, குருட்டு மேய்ப்பனின் கீழ் அகப்பட்டுக் கொண்ட ஆடுகளைப் போல்தாம் மக்கள் துயர்ப்படவும் தொல்லைப்படவும் அச்சுறுத்தப்படவும் வேண்டியிருக்கும். அந்த நிலைகளைத்தாம் ஏறத்தாழக் கடந்த இரண்டு மாதங்களாகத் தமிழகமும், கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய மாநிலங்களும் உணர்ந்துகொண்டு வருகின்றன.

'இந்தியாவில் இராசீவ காந்தி ஆட்சியில் தேன் ஒழுகுகிறது; நெய் வடிகிறது' என்றெல்லாம் அரசியல் திருடர்களாலும், மக்கள் புரட்டர்களாலும் பேசப்படுகிறது. அதுபோல், தமிழகத்தில் புரட்டுத்

(தொடர்ச்சி 3 ஆம் பக்கம் பார்க்க)

தொடர் 2

திம்புப் பேச்சா? தில்லுமல்லு நாடகமா?

— வள்ளிகேள்வன் —

அடுத்து ஆகஸ்டு 15 ஆம் பக்கல் செய்தியைப் பாருங்கள்:

இராமேசுவரம் அருகே மீன் பிடித்துக்கொண்டிருந்த நொண்டி முத்து உட்பட நான்குமீனவர்களைச் சிங்களப் படையினா தாக்கினார்கள். துமுக்கிக்கட்டையால் நையப்புடைத்தும் நொண்டி முத்துவின் ஆண் குறிக்குள் வளையங்களைப் புகுத்தியும், அடித்தும் கொடுமைப் படுத்தியதில் அவர் மயங்கி விழுந்து விட்டார். மற்றொரு மீனவரின் இமைகளை மீன் முள்ளால் தைத்து விட்டனர். மற்ற இரண்டு பேர்கள் என்ன ஆனார்கள் என்பது தெரியவில்லை. நொண்டி முத்துவும், இன்னொருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அமைச்சர் நல்லுசாமி, அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார். (அடடா! நம் அமைச்சர்கள் இதையாவது உருப்படியாகச் செய்கிறார்களே!)

இந்த மூன்று நிகழ்ச்சிகளிலிருந்து நமக்கு ஓர் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது.

சிங்களப் படையினர், ஈழத் தமிழரையும் சரி, இந்தியத் தமிழரையும் சரி, தாக்கினாலோ-கொடுமைப் படுத்தினாலோ இந்திய அரசு எந்த வகையிலும் கண்டு கொள்ளாது.

உண்மையில் இராமேசுவரத் தமிழ் மீனவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையை உறுதியாக இந்திய அரசு எடுத்திருந்தால்கூட, இலங்கையில் இனப் படுகொலை பாதியளவுக்குக் குறைந்திருக்கும்.

ஆனால், தமிழினத்திற்கு எந்த வகையான பாதுகாப்பும் தன்னால் கிடைக்காது என்று இந்திய அரசு, சிங்கள அரசுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிப் பல காலமாகிவிட்டது.

இனி, திம்புப் பேச்சின் தில்லுமல்லுகளைப் பற்றித் தெரிந்துகொள்வோம். திம்புப் பேச்சும், பிற பேச்சுகளும் வெறும் கண் துடைப்பு முயற்சியாகவே நடைபெற்றன என்பது வெளிப்படை.

எப்படியெனில், திம்புப் பேச்சின்போது இரு தரப்பிலும் நடந்த தருக்கங்கள் முறைப்படி நடாப் பதிவில் பதியப்படவில்லை. (அந்த ஏற்பாடே நடக்கவில்லை) இது இந்திய அரசு திட்டமிட்டுச் செய்த அழிம்பாகும்.

ஒப்புக்கொண்ட உறுதிகளை மீறுவதே செயவர்த்தனாவின் சிறப்பியல்பு என்பதை அறிந்திருந்தும், தருக்கங்கள் நடாப் பதிவில் பதிவதற்கு ஏற்பாடு செய்யப்படவில்லை என்றால், அங்கே ஏதோ கமுக்கமான சூது நடந்திருக்கிறது என்றுதானே பொருள். முன்பு கொழும்பில் நடந்த அனைத்துக் கட்சி மாநாட்டில் ஒப்புக்கொண்ட சில திட்டங்களைச் சிங்கள அரசு பின்னர் மறுத்துவிட்டது. அதுபோல திம்புப் பேச்சிலும் நடக்கலாம் என்று ஏன் இந்தியா கருதவில்லை? எடுக்கப்படும் முடிவுகளை செயவர்த்தனா பின்னால் மறுத்தால், மெய்ப்பிக்க என்ன அடிப்படைச் சான்றுகளைக் காண்பிப்பது?

இப்படித் திம்புப்பேச்சின் தொடக்கமே ஈழப் போராளிகளை ஏமாற்றும் நோக்கத்துடன் அமைந்திருந்தது.

அடுத்து, ஏற்கனவே ஒதுக்கித் தள்ளப்பட்ட பழைய திட்டத்தையே தூசி தட்டி, எக்டர் செயவர்த்தனா முன் வைத்தது திமிர்த்தனம் அல்லாமல் வேறு என்ன?

பேச்சு நடந்துக்கொண்டிருக்கும்போது, மூன்று மாதப் போர் நிறுத்தத்தைச் சிங்கள அரசு மீறியதை இந்திய அரசு கண்டிக்க வேண்டாமா? இதையெல்லாம் செய்யாமலிருந்து விட்டு, ஈழப் போராளிகளைக் குற்றவாளிகளாக்கவும், அவமானப் படுத்தவுமே இந்திய அரசு முனைந்திருக்கிறது.

திம்புப் பேச்சின்போது, போராளிகளின் பிறநிகராளிகள் முன் வைத்த 4 கோரிக்கைகளாவன:

1. இலங்கையில் தமிழர் வாழும் பகுதியைத் தனி நாடாக ஏற்கவேண்டும்.

2. வரலாற்றுப் பெருமை வாய்ந்த தமிழீழத் தாயகத்தின் எல்லைக்கோடுகள் வரையறுக்கப்பட வேண்டும்.

3. தன் தீர்வு (சுய நிர்ணய) உரிமை தரப்பட வேண்டும்.

4. இந்தியக் குடிவழித் தோட்டத் தொழிலாளர்க்குக் குடியுரிமை அளிக்கப்படவேண்டும்.

இவற்றின் அடிப்படையில்தான் இலங்கை அரசின் திட்டம் இருக்கவேண்டும் என்று போராளிகள் வற்புறுத்தினார்கள். 'இது இலங்கையின் அரசியல் சட்டத்தையே அடியோடு மாற்றுவதாக இருக்கும்' என்று எக்டர் செயவர்த்தனா மறுத்துவிட்டார். இது நாம் எதிர்பார்த்ததே.

ஆனால், இந்திய வெளியுறவுத் துறைச் செயலாளர் இரமேசு பண்டாரி நடுவராகச் செயல்படுவதை விடுத்து, ஈழப் போராளிகளின் படிநிகராளர்களை 4 கோரிக்கைகளையும் தளர்த்திக்கொண்டு பேச்சை இயல்பு நிலைக்குக் கொண்டுவருமாறு வற்புறுத்தியது நயன்மைக்கு அப்பாற்பட்டதன்றோ?

அது மட்டுமன்று, உணர்ச்சிவயப் படாமலும், பொறுமையாகவும் செயல்பட வேண்டிய-நடுவு நிலை பிறழாமல் இருக்கவேண்டிய பண்டாரி, ஈழப்போராளிகள் மீது வீணே சினத்தையும், வெறுப்பையும் காட்டியுள்ளார்.

திம்புப்பேச்சு நடந்து கொண்டிருக்கும் போதே, இலங்கையில் திரிகோணமலை, வவுனியா ஆகிய பகுதியில் சிங்களப்படையினரின் வன்முறை நிகழ்ச்சிகள் கட்டவிழ்த்து விடப்பட்டுவிட்டன.

நயன்மைப்படி இதற்கு எக்டர் செயவர்த்தனாவிடம் கண்டனம் தெரிவித்துப் பேச்சு நடக்கையில் மூன்று மாதப் போர் நிறுத்தத்தை மீறியதைச் சுட்டிக்காட்டி, உடனே படுகொலைகளை நிறுத்தும்படி, பண்டாரி வற்புறுத்தியிருக்கவேண்டும். அதை விட்டுவிட்டு, ஈழப் போராளிகளை அவர்களது நயன்மையான கோரிக்கைகளைத் தளர்த்திக் கொள்ளும்படி வற்புறுத்தியது பண்புமிக்க நடுவர் ஒருவர்க்குரிய செயலாகத் தென்படவில்லை. மாறாகஉணர்ச்சிவயப்பட்டும், தங்களுடைய கரவான முடிவிற்கு ஈழப் போராளிகள் இணங்கவில்லையே என்ற எரிச்சலிலும் சினங்கொண்டு அவர்களை Bludy Hell என்று ஏசியிருக்கிறார் பண்டாரி.

ஈழப்போராளிகள் தந்த செய்தியின் அடிப்படையில் பி. டி. ஐ. நிறுவனம் வெளியிட்டுள்ள குறிப்பு வருமாறு:

''இந்தியா போன்ற ஒரு நட்பு நாட்டின் உயர் அதிகாரியான பண்டாரி கடுமையான சொற்களைப் பயன்படுத்தியதுதான் வியப்பைத் தருகிறது. பேச்சு தொடர்ந்து நடைபெறவேண்டும் என்பதில் ஆர்வம் காட்டினார். ஆனால் அதேநேரத்தில் இலங்கையில் தமிழர்களைச் சிங்களர் படையினர் கொன்றுகுவிக்கும் போது தொடர்ந்து பேச்சு நடத்த இயலாது என்பதை முழுமையாகப் புரிந்துகொள்ள அவரால் இயலவில்லை. சிங்களப்படையின் வன்முறை நிறுத்தம், போர் ஓய்வு நடைமுறைப்படுத்தம், புதிய சமன்மைத் திட்டத்தை முன்வைத்தல் ஆகியவற்றின் அடிப்படையில்தாம் பேச்சைத் தொடங்கஇயலும் என நாங்கள் கூறியபோது தொடக்கத்தில் அது அவருக்குப்புரியவேயில்லை. இரண்டுமணி நேரம் சூடான தருக்கம் நடந்தது. அதற்குப்பிறகுதான் பேச்சை ஒத்திப்போட அவர் உடன்பட்டார்.

நடந்த நிகழ்ச்சி இதுதான். இரண்டுமணி நேரம் சூடான தருக்கம் நடந்தது. (எக்டர் செயவர்த்தனாவின் தலைமையிலுள்ள சிங்களப் படிநிகராளர்களும் அப்போது உடனிருக்கிறார்கள் என்பதுதான் முகாமையானது.) ஈழப்போராளிகள் அறுதியிட்டு உறுதியாக எடுத்துவைத்த கருத்துகளையோ அவற்றிலுள்ள நயன்மையையோ புறக்கணிக்க இயலாத நிலையில் அகப்பட்டுக்கொண்ட பண்டாரி இலங்கைப் படுகொலையைத் தடுத்து நிறுத்தும்படி எக்டர் செயவர்த்தனாவிடம் வற்புறுத்த விரும்பாமல் (அப்படி வற்புறுத்தினால் ஈழப்போராளிகளின் தனி ஈழக் கொள்கையை ஓரளவாவது ஒப்புக்கொண்டதுபோல் ஆகிவிடும் என்பதால்) பொருளற்ற சின உணர்ச்சிக்கு இடங்கொடுத்தும் பொறுமையை இழந்தும் கீழ்மையான அந்த சொல்லைப் பயன்படுத்திவிட்டார்.

இதனைக்கேட்ட தமிழ்ப் படிநிகராளர் ஒருவர், ''அந்தச்சொல் உங்களுக்கும் பொருந்தும்'' என்று அமைதியுடன் தெரிவித்தார். மேலும் அவர், ''எந்த வகையான ஏச்சையும்-பேச்சையும் கேட்டு நாங்கள் கவலைப்படமாட்டோம். ஆனால் இலங்கை அரசு தூதுக்குழுவின் படிநிகராளர்கள் முன்பாக இரமேசு பண்டாரி அப்படிப்பட்ட ஒரு கீழான சொல்லை எப்படிக் கூறலாம்'' என்று வருத்தத்துடன் கூறியிருக்கிறார்.

இந் நிகழ்ச்சி வழியாகவும், பேச்சுகள் நாடாப் பதிவு செய்யாத சூழ்ச்சியினாலும் திம்புப்பேச்சு என்பது ஈழப் போராளிகளின் முகத்தில் திட்டமிட்டுக் கரியைப் பூசிய நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது.

வருங்காலத்தில் மலரப்போகும் தமிழ் ஈழத்தின் மாட்சிமை மிகுந்த தலைவர்களை அப்படியொரு கீழான சொல்லால் பண்டாரி கடிந்தது, அரசியல் நாகரிகத்திற்கு அப்பாற்பட்டதாகவும் இந்திய அரசியல் வரலாற்றிலே மிகவும் கறை படிந்த நிகழ்ச்சியாகவும் அமைந்துவிட்டது. இனி இதை இராசீவ் மறைக்கவோ-மறுக்கவோ முடியாது.

அதுமட்டுமன்று. ஈழப் போராளிகளை அவமானப்படுத்தியது தமிழ் இனத்தையே ஒட்டுமொத்தமாக அவமானப்படுத்தியது போலவும் ஆகிவிட்டது.

ஆனால், இந்தக் குற்றத்தை மூடி மறைத்துவிட்டு பாலசிங்கம் உட்பட மூவரை நாடு கடத்தியது மிகவும் கொடுமையானதாகும், நாடு கடத்தியதற்காக இராசீவ் கூறும் காரணம் வேண்டுமென்றே இட்டுக்கட்டியது போலவே தெரிகிறது.

''நாடு கடத்தப்பட்டவர்களுள் அவர்கள் (பாலசிங்கம், சத்தியேந்திரன்) மிக அதிகமாகத் தொல்லை கொடுத்தார்கள். அதனால் நடவடிக்கை எடுப்பது தேவை என்று நினைத்தோம்''.

அப்படி அவர்கள் என்ன தொல்லை கொடுத்துவிட்டார்கள்? உண்மையை எடுத்துச் சொன்னார்கள். அது குற்றமா?

(தொடரும்)

இன்றே...!

[இருமடி தனிச்சீர் சமனிலைச் சிந்து]

நிலையான நல்குரவு
நெறியாக நிலவட்டும்-அரு
நெல்லிக்காய் போல்மூடர்
நிறைவாக உலவட்டும்;
விலையான தமிழவுயிர்
விடுதலையை ஈட்டட்டும்-இன்றே
வெற்றிவாகைப் போராளர்
வீரத்தைக் காட்டட்டும்! 1

முழுப்பொய்யர் நெடுந்தடியர்
மூங்கையர்கள் தழைக்கட்டும்-மொழி
முல்லைமறி இரண்டகரும்
முனைந்துநின்று பிழைக்கட்டும்;
விழுப்புலியர் சிங்களத்து
வெறிநாயை வீழ்த்தட்டும்-இன்றே
வீணர்வாய் மூடட்டும்;
வியனுலகம் வாழ்த்தட்டும்! 2

மடியேந்தி பிழைக்கவந்த
மலையாளி ஆளட்டும்-உதிர்
மயிர்போன்ற அமைச்சன்வாய்
மானமின்றி நீளட்டும்;
முடியேந்தி தமிழீழம்
முற்றுரிமை ஆகட்டும்-இன்றே
முண்டெழும்பும் இனத்தீயில்
முட்டாள்கள் வேகட்டும்! 3

மதுக்குடியர் சாலைகளில்
மாநாடு போடட்டும்-இன
மானமற்ற மூடபன்கள்
மதக்கூத்தும் ஆடட்டும்;
புதுக்கருங்கல் கடவுளாகிப்
பொன்மாலை சூடட்டும்-இன்றே
பொதுவுடைமைத் தமிழீழம்
புரட்சிப்பண் பாடட்டும்! 4

ஒப்போலைப் பொறுக்கியரும்
உளறித்தாம் தொலைக்கட்டும்-இன
உணர்வில்லாக் கிறுக்கர்கள்
ஒதுங்கித்தாம் மலைக்கட்டும்;
இப்போது தமிழ்மறவர்
ஈழத்தை மீட்கட்டும்; - இன்றே
எல்லோரும் சமனென்னும்
இனமுரசு கேட்கட்டும்! 5

— தரங்கை பன்னீர்ச்செல்வன்

''தென்மொழி''

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	18 ,,	18 ,,	25 ,,
தனியிதழ்:	1.25 ,,	3-00 ,,	4-00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

தென்மொழி, 5, அருணாசலத் தெரு, சென்னை-5.

கரவுப் பேச்சுகள் காலத்தை நீட்டவே!

ஓய்ந்திடல் இல்லை,என் உள்ளமும் உணர்வும் உயிர்ச்செறிவும்!
தேய்ந்திடல் இல்லை,என் விரல்களும் தாளும்! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை என் உடலும் எனவே! சலிப்பிலனாய்
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன், உரைப்பேன், மக்களுக்கே!

தமிழ்நிலம் தொகுதி 3; பகுதி 44-47
இதழ் எண்: 67

பாவலரேறு அறிக்கை...

(1-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

தலைவர் ஆட்சியில் அனைத்து நலன்களும் வளங்களும் சொரிந்து குலுங்குகின்றன' என்றும் இங்குள்ள ஏமாளித் தமிழர்களும் கோமாளிக் கூத்தர்களும் மேடையுடன் பேசி மக்களை மயக்கி, ஏமாற்றி வருகின்றனர்.

உண்மையாகச் சொன்னால், இன்றைக்கு நாடு முழுவதும் அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடித்துக்கொண்டு இருக்கிறது. மக்கள் காவலர்களாலும் படைத்துறையினராலும் சுட்டுப் பொசுக்கப்பட்டு வருகின்றனர்; வம்பு வழக்குகளாலும், சண்டை சழக்குகளாலும், நோய் நொடிகளாலும் அலைக்கழிக்கப்பட்டுத் துயருறுகின்றனர். பெண்களுக்குப் பாதுகாப்பில்லை. கொடியவர்களும் கொள்ளைக்காரர்களும் குமுகாயக் கேடர்களும் திருடர்களும் நாள்தோறும் மக்களைச் சீர்குலைத்து வருகின்றனர். வேலிகளே பயிர்களை மேயும் வேடிக்கைகள் நாள்தோறும் நடந்து வருகின்றன. செய்தித்தாள்களைப் புரட்டினால், கொள்ளை, கொலை, கற்பழிப்பு போன்ற களவாணிச் செயல்களும் கயமைக் கீழ்மைகளுமே கண்களில் படுகின்றன. இடையிடையே 'இராசீவ் பேசினார்; நடந்தார்; நிமிர்ந்தார்' என்னும் போலி விளம்பரப் புரைசல்களே பக்கம் பக்கமாக, படங்களாக, அச்சிடப்பெற்று அடைந்துக்கொண்டிருக்கின்றன. இடையிடையே 'கைத்தறியின் காவல் தெய்வம்' 'கருணை வள்ளல் எம்.சி.ஆர்' 'சத்துணவு தந்த சரித்திர நாயகன்' 'பொன்மனச் செம்மலின் புரட்சித் திட்டங்கள்' போலும் புரட்டுச் செய்திகளும், போலி நடிப்புப் புன்னகைப் புகைப்படங்களும் அன்றாடம் கண்களைப் புண்களாக்கிக் காதுகளைப் பொள்ளல்களாக்கி, நெஞ்சுகளைப் பாறைகளாக்கி வருகின்றன. இவை தவிர மற்ற பகுதிகளில் திரைப்படக் கொம்மாளக் கூத்தியர்களின் அலுக்கு மினுக்கு அரையம்மண அருவருப்புப் புகைப் படங்கள்! போதுமா, நம் நாட்டின் ஆட்சி அல்லற்பாடுகள்!

கடந்த ஒன்றரை மாதமாக; ஆசிரியர்கள் அல்லோலகல்லோலப்பட்டு விட்டனர். அவர்கள் குடும்பத்தினரும் குழந்தைகளும், இருந்ததை ஆக்கித்தின்றுவிட்டு, இரவு பகலாக, அவர்களின் முகங்களைக் காண ஏக்கமுற்றுச் சிறைச்சாலைகளின் நெடிய வாயில்களில் தவமாய்த் தவங்கிடந்ததை நாமே நேரில் போய்க்கண்டு, நெஞ்சம் குமுறினோம்! புயலும் மழையும் சீறியடித்துத் தமிழகத்தையே வெள்ளக்காடாக ஆக்கிக் கொண்டிருந்தபோது, ஏறத்தாழ ஐம்பதினாயிரம் ஆசிரியர்களும் ஆசிரியைகளும், அவர்களின் குடும்பங்களும் பொழிந்த கண்ணீர் வெள்ளமும், அந்த மழை நீரோடு கலந்தே தமிழகத்தைச் சூழ்ந்து நின்றது! கொஞ்சமும் ஈவு இரக்கமற்ற, கொள்ளைக்கார நொள்ளை அமைச்சர்கள், அவ்வாசிரியக் கூட்டணிக்குழுத் தலைவர்களையும்கூட காணவும் அவர்களுடன் பேசவும் மனமில்லாமல், துணிவில்லாமல் நொண்டிச் சாக்குகளைக் கூறிக்கொண்டிருந்தனர். பள்ளிக் கூடங்களும், கல்லூரிகளும் மூடிக்கிடந்தன. மாணவர்கள் தெருக்களிலும், சிறைகளைச் சுற்றியும், மேய்ப்பர்களை இழந்த ஆட்டுக்குட்டிகளைப் போல, அலமந்து, அரற்றி முழக்கி, உலா வந்தனர். இந்த இக்கட்டுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் நடுவில், இத் தமிழகத்தின் முதலமைச்சர் ஏனோ வாயடைத்தே கிடந்தார். அவர் எங்கேயோ, ஐரோப்பாக் கண்டத்திற்குச் சென்றுவிட்டதைப்போல, அவருக்குப் பகரமாக நம் நெடுஞ்செழியனார் வந்து முகவெழில் காட்டி, ஆசிரியர்கள் முகத்தில் அறைந்ததைப்போல, இழவுரை கூறி விட்டுச் சென்றார்.

இருக்கின்ற நிலையென்ன? எழுச்சியென்ன? எந்த அணுகுமுறையால் இதைத் தீர்க்கலாம்—என்றெல்லாம் எண்ணிப்பாராத நம் தமிழக அரசு நடத்திய ஊமை நாடகத்தின் இறுதித் திரை, ஏறத்தாழ ஒன்றரை மாதங்களுக்குப் பிறகுதான், தூக்கப்பெற்று, முதலமைச்சரின் முகப்பூச்சுப் பார்வை ஆசிரியப் பெருமக்களுக்குக் கிடைத்தது. அதற்குள் எத்தனை எச்சரிக்கைகள்! அச்சுறுத்தல்கள்! இழவுப்பாடுகள்! காவலர் கைக் கொட்டங்கள்! அவற்றுக்கிடையில் ஆசிரிய இறைவர்களில் பதினைவருக்குமேல் இழப்பு! அடடா! இந்த நாடு இப்படியா போகவேண்டும்! ஏன், இறுதியில் முகங்காட்டிய முதலமைச்சர் முதலிலேயே தம் திருவாயைத் திறந்திருந்தால் என்ன? நாவா வெந்துவிடும்! அல்லது உள்ளுக்கு இழுத்துக் கொண்டிருக்குமா? இத்தனை அமளி துமளிக்குப் பின்தானா அவருக்கு இரக்கம் வந்திருக்கவேண்டும்? அல்லது அவர் தலையிறங்காதவாறு அவ்வளவு நிமிர்வு ஏன்? காட்சிக்கெளியர் என்னும் வேந்தமரபு காற்றில் பறந்து போனதோ?

போகட்டும். இந்த நாட்டுத் தலைநகரின் கடற்கரையை அழகுபடுத்தும் செயல், ஆயிரக்கணக்கான ஏழை எளிய மீன்பிடி வாழ்நரின் அன்றாடப் பிழைப்பைவிட மிக முகாமையானதோ? அவர்களின் அமைதிப் போராட்ட வாழ்க்கையில்வேறு சூறுவளியைக் கிளப்பி அவர்களை அலைக்கழித்திருப்பானேன்! சுட்டுப் பொசுக்குவானேன்? 'செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க செய்யாமையானும் கெடும்' என்னும் வினைசெயல் திறங்கூறும் கருத்துகளில், முதற்கருத்துக்கு மீன்பிடி தொழிலாளர் போராட்டமும்; இரண்டாம் கருத்துக்கு ஆசிரியத் தொழிலாளர் போராட்டமும், அரசின் அணுகுமுறைக்குக் கட்டியங்கூறி நிற்கின்றனவே! இதற்கான முழுப் பொறுப்பும் அரசுக்கன்றோ? எத்தனை அலைச்சல்கள்! அல்லற்பாடுகள்! அரசு இயந்திரப் பயன்படுத்தங்கள்! அவற்றுக்கெல்லாம் எத்தனை வரிப்பணச் செலவுகள்! இழப்புகள்! இவ் விழப்புகளையெல்லாம் முதலமைச்சர் ஏற்றுக்கொள்வாரா? என்னே, கொடுமை! என்னே அறியாமை!

இவற்றுக்கெல்லாம் அப்பால், முதலமைச்சரும் அவர் பரிவாரங்களும் ஆட்சி வீற்றிருக்கும் கொலுமண்டபத்திலுமன்றோ கூப்பாடுகள்! கூச்சல்கள்! ஆரவாரங்கள்! சச்சரவுகள்! சள்ளைப்பாடுகள்! இவற்றையெல்லாம் வளரவிட்டு வேடிக்கை பார்த்தனர் அமைச்சர் பெருமக்கள்! செழு செழுவென்று போராட்டம் வளர்ந்த பின்னர், காவலர்களை வண்டி வண்டியாகக் கொண்டு வந்து நிறுத்தி வெருட்டி, மிரட்டி, அடக்கிவிடப்பார்த்தது, அரசு! வெட்கக்கேடு!

எடுத்ததெற்கெல்லாம் காவல்துறையா? அவ்வாறானால் அது காவல்துறையா? ஏவல் துறையா? காவல்துறை என்பது பொதுமக்களுக்கா? அரசுக்கா? இரண்டுக்குந்தான் என்றால், காவலர்களின் தடிகள் பொதுமக்கள் மீதே விளையாடுவதேன்? அவர்களின் வேட்டுக் குழல்கள் பொது மக்களுக்கே சூட்டுக்கோல்களாக மாறுவதேன்? காவல்துறை தன் கையில் உள்ளதென்று, அரசு மக்கள் மீது ஏவி விடுவதில் ஓர் அமைவு வேண்டாவா?

ஆசிரியப் பெருமக்கள், மீன்பிடி தொழிலாளர்கள், அரசுச் செயலக ஊழியர்கள்—இவர்கள் மூத்தரத்தாரும் என்ன அறியாதவர்களா? அல்லது குற்றவாளிகளா? அல்லது குண்டர்களா? அவர்களின் கோரிக்கைகள் என்ன இந்திரப் பட்டினத்துச் செல்வங்களையா எங்களுக்குக் கொண்டுவந்து கொடுங்களென்று கேட்டார்கள்? படகோட்டியாகவும், தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசும் தோழனாகவும் முதலமைச்சர் புனைந்துகொண்டு நடிக்கும்போது இருந்த உணர்வு, செயல்களை நேர்முகமாக அணுகும்போது ஏனில்லை? ஏனிந்தத் தடுமாற்றம்!

இறுதியில் நடந்ததென்ன? மீன்பிடி தொழிலாளர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளையும் உடைமைகளையும் உடனே கைகட்டிக்கொண்டு திருப்பிக் கொடுக்க மீமிசை நடுவர் மன்றம் தீர்ப்புக் கொடுக்கவில்லையா? ஆசிரியர்களின் கோரிக்கைகளில் பெரும்பாலன ஏற்கப்பெற்றன என்று முதலமைச்சரே பின் வாங்கி அறிவிக்கவில்லையா? செயலக ஊழியர்களிடம் இணக்கம் பேசிப் பொங்கல் வெகுமதி காட்டி, முதலமைச்சர் கொண்டையத்திலிருந்து இறங்கி வந்து கைபடித்துக் கூறிவிட்டு, மீண்டும் செய்யாற்றுத் தேர்தல் வெற்றி வேண்டிக் கைகூப்பித் தொழவில்லையா? அங்குள்ள நெசவாளர் முன் 'கைத்தறியின் காவல் தெய்வம்' என்று பொய்யுரை புகலவில்லையா? காவல் தெய்வம் ஒப்போலைக்காகப் பொதுமக்களைக் கைகூப்பியும் தொழுகின்ற காட்சி, தெய்வ இலக்கணத்தையே அவமதித்ததாகாதா? அரண்மனை வாழ்வுக்கென்றால், கைகூப்பித் தொழுவது: மக்கள் உரிமைகளைக் கேட்டால் கை நீட்டி அடிப்பதா? வேட்டுக்குழலை நீட்டிச் சுட்டுப் பொசுக்குவதா? என்னே, வயிற்று வாழ்க்கைக்கு இவ்வரசியல் இரவலர்கள் செய்யும் ஏமாற்று! கொடுமை! ஏக்கழுத்தம்! ஏடாகூடம்!

எப்படியோ, தம்தம் அரசியல் நலன்களுக்காக மக்களை எவ்வளவு கொடுமையும் படுத்தலாம்; எவ்வளவு நாயப் பிசகாகவும் நடக்கலாம்; எத்தனைப் புரட்டுகளும்-உருட்டுகளும் பண்ணலாம்; எத்துணை வல்லாண்மையாகவும், நாக்கடிப்பாகவும் நடந்து கொள்ளலாம்; சட்டங்களை மாற்றலாம்; திட்டங்களை மழுக்கலாம்; வாயடிக்கலாம்; கையடிக்கலாம்; பையடிக்கலாம் என்னும் நிலை உருவாகிவிட்டது.

இந்த நிலையை எளிதில் மாற்றிவிட முடியாது. எழுத்தில் உணர்த்திவிட முடியாது; பேச்சில் விளங்கவைத்துவிட முடியாது! மக்கள் போராட்டத்தின் வழிதான் இவற்றை வேரோடும், வேரடி மண்ணோடும் கல்லியெறிய முடியும் என்னும் உண்மையை, ஆசிரியப் பெருமக்களின் ஒருங்கிணைந்த போராட்ட வெற்றியும், மீன் பிடி தொழிலாளர் தம் எழுச்சி மிக்க கோரிக்கை மீட்பும், அரசுச் செயலக ஊழியர் தம் ஒன்றித்த பேருணர்வு ஈட்டமும் நமக்கு நன்கு புலப்படுத்திக் காட்டுகின்றன. மக்கள் உரிமைப் போராட்டப் படிநிலை வளர்ச்சியில் (பரிணாமத்தில்) இஃதொரு காலக்கட்டத்தின் ஆக்கம்; மேம்பாடு! இதனைப் பொதுமக்களின் அனைத்துப் பகுதியினரும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும். அதற்குத் துணைபுரிந்த உழைக்கும் மக்களுக்கு நம் தலைதாழ்ந்த நன்றியும், நெஞ்சு நிறைந்த வாழ்த்துகளும், உறுதுணையும் என்றும் உண்டு! மாணவர்களை மட்டுமே கட்டுப்பாட்டுக்குள் அடங்கத் தெரிந்தவர்கள் என்றில்லாமல், தாங்களும் கட்டுப்பாட்டுக்குள் அடங்கத் தெரிந்தவர்கள். அத்துடன் போராடவும் தெரிந்தவர்கள்' என்று உலகுக்கு எடுத்துக்காட்டி, வரலாறு படைத்த ஆசிரிய இறைவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுவதுடன், அவர்களிடத்தில் இக்கால் படித்துக் கொண்டுள்ள மாணவர்களையாகிலும், இன்றுள்ள அரசியல் கரவாட்டக்காரர்களைப் போலும், கொடுமைக்காரர்களைப்போலும் உருவாக்காமல், நல்ல குடிமக்களாகவும், ஆள்கின்ற மக்களாகவும் உருவாக்கும்படி ஒருவேண்டுகோளையும்முன்வைக்கின்றோம்!

பெரிய போருக்கு முனைகிறார் செயவர்த்தனா!

87 போர் வானூர்திகளுடன் அமெரிக்கப் போர்க்கப்பல் இலங்கைக்கு வந்துள்ளது!

தமிழினத்தைப் பூண்டோடு அழிக்க அமெரிக்காவும், பாக்கித்தானும் துணை போகின்றன!

இலங்கையில் நாள்தோறும் கொலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இனச் சிக்கலுக்கான தீர்வு, எதுவும், செயவர்த்தனாவுக்குப் பிடிபடவில்லை; அல்லது அவர் அதை மழுப்பிக்கொண்டிருக்கிறார். திசம்பர் 9-ஆம் பக்கல, இந்தியத் தலைமையமைச்சரை அவர் புதுடில்லியில் சந்திப்பதாகவிருந்த நிகழ்ச்சி நீக்கம் செய்யப்பட்டுவிட்டது; ஏனெனில் அந்த நாளில் அவர் மிக முகாமையானதொரு தலைவரை-பாக்கித்தான் குடியரசுத்தலைவர் சியா-வுல்-அக்கை, கொழும்பு நகரில் வரவேற்க வேண்டியிருந்தது.

இதற்கிடையே, இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில், இறந்தவர்களின் சடலங்கள் குவிந்து கொண்டுள்ளன. சுட்டுக் கொலை செய்யப்படும் எவராயினும் ஆண், பெண், குழந்தைகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு 'வன்முறையாளர்கள்' என்ற பெயர் சூட்டப்படுகிறது.

மிகக் கடினமானதொரு கட்டத்தை இலங்கை கடந்து கொண்டுள்ளது என்பதில் எவருக்கும் ஐயமிருக்க முடியாது. இந்த நேரத்தில் அந்த நாட்டின் அரசியல் தலைவர்களுக்குத் தேவையானது அரசியல் முன்னோக்க உணர்வும், தம் முன்னுள்ள சிக்கல்களை நேருக்குநேர் எதிர்நோக்கி, சுமூகமான அரசியல் தீர்வு காண்பதற்கான உறுதிப்பாடும்தான்.

ஆனால், அந்த அரசோ தன் கவனத்தையும், பார்வையையும் வேறு திசைகளில் செலுத்தி வருகிறது. முதலில், இசுரேலிய கமுக்கப்படையான 'மொசாத்'தைத் துணைக்கு அழைத்தது. இப்பொழுது 87 வானூர்திகளைச் சுமந்து கொண்டுள்ள அமெரிக்க மிகப்பெரிய வானூர்தி தாங்கிக் கப்பலான 'கிட்டி ஆக்' கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது: கப்பலின் உள்ள வானூர்தி ஓட்டிகளுக்குப் பயிற்சி தருவதற்காகவே, தாம் வந்திருப்பதாகக் கப்பல் தலைவர் நேருரை கொடுத்துள்ளார். அக் கப்பலில் அணு போர்க்கருவிகள் உள்ளனவா என்பதற்கு அவர் விடையளிக்கவில்லை.

குழம்பிய குட்டையில் 'பயிற்சி' பெறுவது, அமெரிக்க படைத்துறைக்குப் பிடித்தமானதொரு செயல் ஆகும். 1971-இல் கிழக்கு வங்க விடுதலைப் போரின்போது, அமெரிக்கப் போர்க் கப்பலான 'என்டர்பிரைசு' வங்க விரிகுடாவில் நுழைந்ததை நாம் மறந்துவிட முடியாது. அதுவும், இந்துமாகடலை அமைதி மண்டலமாக்கக் கோரும் தீர்மானம், ஐ.ஒ. பொது அவையில் நிறைவேற்றப்பட்ட அதே 1971-ஆம் ஆண்டில்தான் அது நடைபெற்றது.

இப்பொழுது, அமெரிக்க, நடுவண் கட்டளைப் பகுதியினுள் (சென்ட்காம்) இடம்பெற்றுள்ள இலங்கைத் துறைமுகத்தில், அமெரிக்கப் போர்க் கப்பல் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது, இந்தப் பகுதியில், அமெரிக்க போர்த் தந்திர விளையாட்டில் இலங்கையையும் ஈடுபடுத்துவதற்கானதொரு முயற்சியே என்றுதான் நாம் கணிக்க முடியும்.

ஏற்கனவே, இந்துமாகடலை 'மூன்றாவது படைத்துறை முகாமைப்பகுதி' (மேற்கு ஐரோப்பாவையும், தூரகிழக்கையும் அடுத்து) என்று கூறிக்கொண்டு, அமெரிக்கா 40 போர்க் கப்பல்களை இப்பகுதியில் நிறுத்தி வைத்துள்ளது. குரூயிசு, தோமகாக் மற்றும் ஆர்ப்பூன் ஏவுகணைகளைக் கொண்டவை அக் கப்பல்கள். தவிர, தனது தியகோ கார்சியா தளத்தில், அணுக் கருவிகளுடன் கூடிய பி-52 குண்டு வீசி வானூர்திகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இப் பகுதியைச் சேர்ந்த நாடுகளைத் தனது படைத்துறை வளையத்தினுள் இழுப்பதற்கும், அவற்றின் மீது தன் ஆளுமையைச் செலுத்துவதற்கும், அமெரிக்கா கடைப்பிடிக்கும் வழிகள், அந்த நாடுகளின் அருகே படைத்துறைப் பயிற்சிகளை நடத்துதல், பொருளியல் 'உதவி', மற்றும் அரசதந்திரம் ஆகியவையே. இந்து மாகடல் பகுதியில் அமெரிக்கப் படைத்துறை, மற்றும் கடற்படை ஆகியவை நிலையாகத் தங்கியிருப்பதற்கே, அமெரிக்கா திட்டமிடுகிறது.

இந்து மாகடலை அமைதி மண்டலமாக்குவதற்கான மாநாடு விரைவில், அடுத்த ஆண்டிலேயே கூட்டப்பட வேண்டும் என்று, தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உலக ஒன்றியப் பொதுக் குழுக் கூட்டத்தில், இந்தியப் படிநிகராளியான கான் வலியுறுத்தினார். 'இப் பகுதியிலுள்ள நாடுகளின் விருப்பத்திற்கு எதிராக, இங்கு படைத்துறைத் தளங்களையும், கடற்படையையும் வலுப்படுத்துவது இப் பகுதியில் பதட்ட நிலையை அதிகரிக்கவே உதவும்', என்று அவர் கூறினார்.

ஆனால், மாநாடு நடத்துதற்கான அரசியல் சூழ்நிலை வாய்ப்பாக இல்லை என்றுகூறி, கொழும்பு நகரில் நடைபெறுவதாகவிருந்த மாநாட்டை அமெரிக்கா தொடர்ந்து தடுத்து வருகிறது; வேண்டுமானால்; பிறர் அந்த மாநாட்டில் பங்கு கொள்வதை அமெரிக்கா தடுக்காது என்றும்; அமெரிக்கா அதில் கலந்து கொள்ளாது என்றும் அமெரிக்கப் படிநிகராளி கூறினார்.

இந்து மாகடல் பகுதியில் அமைதிபற்றிப் பேச அணியமாக இல்லாத அமெரிக்கா, கொழும்பு நகருக்குத் தனது அணுக் கருவிக் கப்பலை அனுப்பி, 'முண்டா'த் தட்டிக் காட்டுவதன் நோக்கம் பிறகு என்னவாகத்தான் இருக்க முடியும்?

— ஏ. எசு. மூர்த்தி

அசிரியரின் 2-ஆவது மலேசியச் செலவு ஒத்திவைப்பு!

— தொடர்-2

உலகில் மண் விடுதலைக்குப் போராடும் மக்களினங்கள்!

— வியனரசு —

3. நியூகாலோனியா :

ஆசுத்திரேலியாவுக்கு அருகில் உள்ள தீவுகளில் ஒன்றுதான் நியூகாலோனியா. இம் மண்ணின் சொந்த மக்களினம் 'காணுக்' எனும் தொல்குடி மரபு இனம் ஆகும்.

இத் தீவில் 1946 தொடக்கத்தில் பிரெஞ்சுக்காரர்கள் இங்குள்ள கனி வளங்களைச் சுரண்டும் நோக்கோடு குடியேறினர்கள். பிறகு படிப்படியாகத் தீவு முழுவதையும் தங்கள் ஆளுமையின்கீழ் கொண்டு வந்துவிட்டார்கள். 1953 இல் முழுமையான பிரெஞ்சு ஆட்சி அமைக்கப்பட்டது. 1960 முதல் 1970 வரை பத்தாண்டுகளில் பிரெஞ்சுக்காரர்களின் குடியேற்றம் மிகத் தீவிரமாக அதிகரித்தது. இதனால் கொதிப்படைந்த 'காணுக்' இன மக்கள், சொந்த மண்ணில் சிறுபான்மையாக்கப்படுவதைஉணர்ந்து போர்க்கொடி தூக்கி அறவழியில் போராடினர்கள்.

அறவழிப் போராட்டங்கள் பயன் அளிக்காமல் போகவே, மிகக் கடுமையான போராட்டங்கள் விடுதலை முழக்கமிட்டு எழுந்தன. 'காணுக்' இன மக்களின் உணர்ச்சிப் போராட்டங்களை உணர்ந்து கொண்ட பிரெஞ்சு அரசு நியூகாலோனியாவிற்கு விடுதலை கொடுக்க முன்வந்துள்ளது. இருப்பினும் கொடுக்கப்படும் விடுதலை பெற்ற அரசுரிமை முன்பு போல் பிரெஞ்சுக்காரர்கள் கைக்குப் போய்விடாமல் மிகவும் கண்ணும் - கருத்துமாகப் போராட்டக்காரர்கள் போராடி வருகிறார்கள். இந் நாட்டின் விடுதலை இயக்கமாக யூனியன் காணேக் டொமினியன் உள்ளது. இதன் தலைவர் யூரேகி என்பவர் மிகத் துணிவுடன் பிரெஞ்சு அரசை எதிர்த்துப் போராடி வருகிறார். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் 'காணுக்' இன மக்கள் விடுதலை பெற்று உரிமை மூச்சு விடுவோம் எனும் மகிழ்ச்சியில் இருக்கிறார்கள்.

4. பாலசுத்தீனம் :

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வந்த இசுலாமியரின் சொந்த மண்தான் பாலசுத்தீனம். இத்த நிலப்பரப்பை, இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலகெங்கும் பரந்து திரிந்து வாழ்ந்துவந்த யூதர்கள், பழைய ஏற்பாடு பைபிளைச் சான்று காட்டிக் கையகப்படுத்தித் தங்கள் தாய்நாடு (இசுரேல்) என்று அறிவித்தார்கள். உடனே அமெரிக்காவும், உருசியாவும் அதை ஏற்றுக்கொண்டன.

ஆனால், மண்ணுக்குச் சொந்தமான அரேபியர்கள் தங்கள் தாயகத்தை எப்படியேனும் மீட்டுவிடமெனப் பல குழுக்களாக இருந்து போராடி வருகிறார்கள். 19 இசுலாமிய நாடுகள், பாலசுத்தீன விடுதலைக்கு ஆதரவு காட்டி வருகின்றன. எல்லா விடுதலைக் குழுக்களையும் 1964 இல் யாசர் அராபத் இணைத்து, பாலசுத்தீன விடுதலைக் கழகம் (P.L.O) உருவாக்கி மிகவும் துணிவுடன் போராடி வருவதுடன், உலக நாடுகளின் ஆதரவையும் பெற்றிருக்கிறார்.

அராபத்தைக் காட்டிலும் மிகத் தீவிரமான இயக்கங்களும், போர்ப் படைகளும் போராடி வருகின்றன. எனினும், அராபத்-தாம உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவராக விளங்குகிறார். உலக ஒன்றியப் பேரவையில் அராபத்திற்குத் தனி நாட்டுத் தலைவர் தகுதி தரப்பட்டுள்ளது. அனைத்து நாடுகளின் நல் ஆதரவுடன் பாலசுத்தீனம் விரைவில் விடுதலை பெறும் என உலகத் தலைவர்கள் கருதுகிறார்கள்.

5. அருபா :

இரண்டாம் உலகப் போருக்குப்பின் இங்கிலாந்து ஆட்சியில் இருந்து பிரிந்த நெதர்லாந்தில் உள்ள ஒரு மாநிலம்தான் அருபா. நெதர்லாந்து மக்களினத்திற்குப், அருபா மக்களினத்திற்கும் வேறுபாடுகள் இருப்பதால், இணைந்து வாழமுடியாத நிலையில் அருபா மக்கள் அற வழியிலும், சில காலங்களில் மற வழியிலும் போராடி வருகிறார்கள்.

இந்த விடுதலைப் போராட்டத்தை உணர்ந்து கொண்ட நெதர்லாந்து அரசு, அருபாவிற்கு விடுதலை கொடுக்க முன்வந்துள்ளது. 1986 ஆம் ஆண்டு சனவரி 1 ஆம் நாள் அருபா தனி நாடாக மலர்ந்து விடுதலைக் கொடியை விண்ணில் பறக்கவிட்டு அருபா மக்கள் மகிழ்வார்கள்.

6. கிரேனடா :

கரிபியன் கடல் பகுதியில் கிழக்கிந்தியத் தீவுகளில் ஒன்றுதான், கிரேனடா என்ற சின்னஞ்சிறிய நாடு. 1958 இல் இங்கிலாந்து ஆளுமையின் கீழ் இருந்து விடுபட்ட கிரேனடா, கிழக்கிந்தியத் தீவுகளின் இணையம் என்ற பெயரில் இயங்கி வந்து, பின் 1967 முதல் மாநிலத் தன்னாட்சியுடன் செயல்பட்டு, இறுதியாக 1974 ஆம் ஆண்டு முழு உரிமை பெற்ற தனி நாடாக மலர்ந்தது கிரேனடா.

விடுதலை பெற்ற கிரேனடாவில் வலது சாரி இயக்கமான புதிய அணிகல கட்சியும், அதன் தலைவராக எரிக் கெய்ரியும் தலைமையேற்று ஆட்சி செய்துவந்தார். இவர் சுரண்டல் பிரிவினர்க்குத் துணை போவோராகவும் சரியான ஊழல் பேர்வழியாகவும் செயல்பட்டு வந்தார். இதனால் மக்களும், படைத்துறையும் இவர் மீது வெறுப்பு அடைந்துவந்தனர்.

இதை வாய்ப்பாகப் பயன்படுத்திப் படைத்துறை உதவியுடன் புதிய இடதுசாரிக் கட்சியின் தலைவர் மாரிசு பிசப், அரத்தம் சிந்தாமல் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றினர். அருகில் உள்ள நிகாரகுவோ எனும் நாட்டிலும் கியூபாவிலும் இடதுசாரி ஆட்சிகள் நடப்பதால், இந் நாடுகளைத் தோழமை நட்பு நாடுகளாக ஆக்கிக்கொண்டு, உருசியாவின் துணையுடன் கிரேனடாவில் மிகப்பெரிய அளவிலான வானூர்தி நிலையம் ஒன்று அமைக்கத் திட்டமிட்டுத் தலைமையமைச்சர் மாரிசு பிசப் மிகத் தீவிரமாச் செயல்பட்டு வந்தார்.

இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரேகன் இதை எப்படியேனும் முறியடித்துவிட வேண்டுமெனத் திட்டம் தீட்டினர். மாரிசு ஆட்சி, மக்களுக்கும், படைத்துறைக்கும் முழு நிறைவு அளித்தது. இதனால் மாரிசு தமக்கு மிகுந்த சாய்கால் இருப்பதாக எண்ணிக்கொண்டு, 1979 வரை பொதுத் தேர்தல் நடத்தாமல் தள்ளிக்கொண்டே வந்தார்: இதைப் பயன்படுத்தி இவரை வீழ்த்திவிட வேண்டுமென நினைத்த ரேகன், 1983 ஆம் ஆண்டு நல்லெண்ண நோக்கோடு மாரிசு பிசப்புக்கு அமெரிக்கா வரும்படி அழைப்பு விடுத்தார். அழைப்பை ஏற்று பிசப்பும் அமெரிக்கா சென்றார். ரேகன் திட்டமிட்டப்படி பிசப் அமெரிக்காவின் கரவான வலையில் சிக்கியவாறு தாயகம் திரும்பினர். பின்னர் படிப்படியாகப் பிசப் கட்சிக் கொள்கைகளுக்கு மாறாகச் செயல்பட்டு வந்தார். இதனை உணர்ந்துகொண்ட கட்சி அவரைத் திருந்தும்படி பலமுறை தீர்மானங்கள் போட்டுக் கேட்டுக்கொண்டது. ஆனால், பிசப் அவற்றை ஏற்க மறுத்துக்கொண்டே வந்தார்.

இந் நிலையில் 20-10-83 இல் 15 ஆயிரம் மக்கள் கொண்ட கூட்டம் ஒன்று, பிசப் இல்லம் நோக்கி சென்று அவரை வெளியே தூக்கிக்கொண்டு வந்து கொலை செய்துவிட்டார்கள். இதனால் பிசப் ஆதரவாளர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையே பெரும் கலவரங்கள் ஏற்பட்டன. இதனை ஏற்கனவே எதிர்பார்த்துக் கொண்டிருந்த அமெரிக்கா, இதனையே காரணம் காட்டி, கிரேனடாவில் உள்ள 1,000 அமெரிக்கர்க்குப் பாதுகாப்பில்லை எனக்கூறி, கிரேனடா மீது போர் தொடுத்து, அந்த நாட்டைக் கையகப்படுத்திக்கொண்டது. பல உலக நாடுகள் இதற்குத் எதிர்ப்புத் தெரிவித்தும் அமெரிக்கா பொருட்படுத்தவில்லை.

கிரேனடா மக்களும், புதிய இடதுசாரிக் கட்சியும் கிரேனடாவை மீட்டுவிட வேண்டுமெனத் தொடர்ந்து போராடி வருகிறார்கள். கியூபாவும் இவர்களுக்குத் துணையுடன் செயல்பட்டு வருகிறது. (தொடரும்)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் போராளிகளுக்கு, மூலனூரில் மூன்றாம் முறையாகப் பொருளளிப்பு!

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தைச் சார்ந்த போராளிகள் செல்வன்கள், சிவபாலன், சிவம், சுந்தர், காசி, அருண் ஆகியோர் இவ்வட்டாரத்தில், ஆசிரியர்கள். குமாரசாமி, பாலுச்சாமி, ஆகியோரின் துணையுடன் சென்று. தங்கள் துயரக்கதைகளை எடுத்துக் கூறினார்கள். இவ்வட்டாரம் மிகவும் பின் தங்கிய பகுதியாக இருந்தாலும், மனமுவந்து பொருளுதவி நல்கியுள்ளார்கள அவர்களது இனவுணர்வு பாராட்டப்படவேண்டியதாகும். பொருளுதவி வழங்கிய சிற்றூர்கள். பிறைக்கோட்டில் உள்ளது அவர்கள் வழங்கிய தொகை.

வடுகபட்டிக தொடக்கப்பள்ளி ஆசிரியர் நடுவம் (240); மஞ்சக்காம்பட்டி (200); வளையக்காரன் வலசு (150); சின்னாரவலசு (250); வடுகபட்டிப் பொதுமக்கள் (165); குமாரபாளையம் சர்வோதய சங்கம் (200); நெடுவலசு ஊர்ப்பொதுமக்கள் (280); மூக்குத்தரிச்சான் பாளையம் (25); மாதவநாயக்கன் பட்டி (95); சம்பன்கரை (201); வண்ணாபட்டி (300); பெரிய போதூர் (45); சின்னப்போதூர் (10); சடையப்ப கவுண்டன் புதூர் (283); அரக்காரன் வலசு தொ.ப.ஆ. நடுவட்டி (380); அரிக்காரன் வலசு ஊர்ப் பொது மக்கள் (405); புதுப்பை (1210); நன்செய் தலையூர் (250); மூலக்கடை (45); ஆக மொத்தம் உருபாக்கள் = 4734.

இந்த நான்காயிரத்து எழுநூற்று முப்பத்து நான்கு உருபாக்களும் நடுத்தர, கீழ்நிலை மக்களால் வழங்கப்பட்டவையாகும். அவர்கள் வழங்கிய தொகை சிறியதாக இருந்தாலும் அவர்கள் காட்டிய ஆர்வமும், இனவுணர்வும் பெரியவாகும். இன்று தமிழகத்தில் உள்ள எளிய குடிமகனும்கூட ஈழத்தில் நடைபெறும் கொடுமைகளைக் கேட்டுக் கொதிப்படைந்துள்ளான் என்பது, தெளிவாக அறியமுடிகிறது. நேரடியாகத் துணை செய்ய இயலாத நிலைக்கே வருந்துகின்றனர்.

சடையப்பக் கவுண்டன் புதூர் சிற்றூரில், இன்றைய குமுகாயத்தில் அனைவரினும் தாழ்ந்த வாழ்க்கைத்தரமுடையவர்கள், மாதாரிகள், என்ற ஆதிதிராவிடமக்கள், அவ்வூரிலுள்ள அவ்வின 'மக்கள் சிலர், தங்கள் வறுமை நிலையையும் மறந்து, தங்களால் முடிந்த பொருளுதவி நல்கியுள்ளார்கள் என்றால், ஈழக் கொடுமைகள் இங்குள்ள மக்களை எந்த அளவிற்குத் தாக்கத் தொடங்கியுள்ளது என்பதை அறியலாம்.

விலை பொருள் இல்லான்கொடையே கொடைப் பயன் என்ற மெய்ம்மொழி இங்கு நினைவு கூரத்தக்கது. இன்னொன்றும் கவனிக்கத்தக்கது. நடுத்தர நிலைக்கும் கீழுள்ள மக்களே இதில் அதிகம் ஆர்வம் காட்டுவதோடு, தங்களால் இயன்ற உதவியைத்தர விரைந்து முன்வருகின்றனர். மிகுந்த ஏந்துகளோடும், வளத்தோடும் வாழ்கின்ற பெரும்பாலோர் இதில் அவ்வளவாக விருப்புடன் ஈடுபடுவதில்லை என்பது கவனிக்கத்தக்க ஒரு செய்தியாகும்.

ஒரு சிலராவது தந்நல நோக்கமின்றி, முழுமையான பொதுநல நோக்குடன் செயல்பட முன்வருவார்களானால், முறையாக மக்களை அணுகி, ஆங்காங்குள்ள நல்லவர்களைத் துணைக்கொண்டு செயல்படுவார்களானால் பெரிய செயல்களைச் செய்ய முடியும் என்பது தெளிவாக விளங்குகிறது. இன்றைய நிலையில் தந்நலமிக்க காரறிவாளர்களின் இழிந்த செயல்களாலும், சுரண்டி வாழ்வதையே தொழிலாகக் கொண்ட அரசு ஊழியர்கள் பெரும்பாலோரின், செயல்களாலும், இரண்டகம் செய்வதையே தலையாய பணியாகக் கொண்ட தலைவர்களின் இரண்டகச் செயல்களாலும் மக்கள் மிகுந்த ஏமாற்றமும், வெறுப்பும் அடைந்துள்ளனர் என்பதும் தெள்ளத் தெளிவாக விளங்குகிறது. எனவே நல்லவர்கள் இவ்வேந்தைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்தால், தமிழினம், மாண்ட பெருமையை மீட்டெடுக்க முடியும். செய்வோமா? ஒன்றுபடுவோமா? வென்றெடுப்போமா உரிமையை? இரண்டகர்கள் இழிந்தவர்களாக ஆக்கப்படுவார்களா? ஈழக் கொடுமைகள் அழிந்திடுமா? அழிக்கப்படுமா? தந்நலப் பேய்களும், சுரண்டல் சூதர்களும் ஒழிவார்களா? காலம் விடை கூறட்டும்.

மேற்கூறிய தொகைத் தண்டலுக்காகப் பலர் துணை செய்துள்ளனர். அவர்கள் தங்களுக்கு இதனால் எந்தப் பயனும் இல்லை என்பதை அறிந்தும், தங்களது சொந்த அலுவல்களையும் தவிர்த்துவிட்டு, இரவு நேரங்களில் கால் நடையாகவும், மிதிவண்டியிலும் வந்து, இப்பொருள் தண்டலுக்குத் துணை நின்றுள்ளனர். அவர்கள் அனைவருமே, எளிய மாந்தர்கள் தாம்! இன்றைய குமுகாயத்தில் ஏழை எளிய மக்களுக்குத்தாம் மற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற உணர்வு மிக்கிருக்கிறது என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும்.

அவ்வாறு துணைபுரிந்தவர்களில் வருகப்பட்டிப் பள்ளித் தமிழாசிரியர் திரு ஏசுதாசு அவர்கள் குறிப்பிடத்தக்கவர். இப் பணிக்காக அவர் தமது யாக்கையை எவ்வளவோ வருத்திக்கொண்டுள்ளார். அவர் பணி பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். வண்ணாபட்டி மயில்சாமி, அவர் பொருள் தண்டலுக்குத்துணை நின்றதோடு, அங்குச் சென்ற அனைவருக்கும் உணவளித்துச் சிறப்பித்தது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அவ்வூரிலுள்ள இன்னும் பெரியவர்கள் பலர் மனமுவந்து துணை நின்றது பெரிதும் சிறப்புடைய செயலாகும். சம்பன் கரையிலுள்ள கடைக்காரர் உணவளித்துச் செய்த உதவி, நெடுவலசிலுள்ள விடுதலைப் புலிகளின் தோழமை இயக்கத் தலைவர், கார்த்திகேயன், போதூர் ஊர்த் தலைவர் மார்க்கம் பட்டி ஆசிரியர்கள் இருவர் ஆகியோர்களின் பணி ஆகியன பெரிதும் பாராட்டிப் போற்றப்படவேண்டியதாகும். மேலும், பொதுமக்கள் பலரும் அங்குள்ள நிலைமைகள், சிங்களர் கொடுமைகள் ஆகியனபற்றியெல்லாம் ஆர்வமுடன் கேட்டுத் தெரிந்துகொள்ள முயன்றது, ஈழச்சிக்கலில் தமிழக மக்கள் எவ்வளவு ஆர்வமுடன் இருக்கிறார்கள் என்பதை உணர்த்தியது. இந்த நல்ல ஏந்தான காலத்தை, இந்த ஏமாறிய தமிழகம் எப்படிப் பயன்படுத்தப் போகிறது என்பதற்கு காலம்தான் விடை கூறவேண்டும்.

செய்தி: புலவர். அறிவுடைநம்பி.

போராடாமல் உரிமை பெறமுடியாது!

மாசுக்கோவில் பறிபோன இந்திய மானம்!

இசுமயிலாவ், உணவு மற்றும் தங்கும் விடுதி!

உருசியத் தலைநகரமான மாசுக்கோவின் பெருமைக்கு அழகு தரும் ஐந்து விண்மீன் விடுதி!

உருசிய அரசின் விருந்தினர்களை மட்டுமே தனது வாடிக்கையாளர்களாக அனுமதித்து வந்த இந்த விடுதியின் நான்கு தளங்கள் கடந்த சூலை 27 முதல் ஆகத்து 3 வரை, இந்தியாவிலிருந்து உருசியாவிற்குத் தூதுக்குழுவாக வந்திருந்த இந்திய இளைஞர்கள் தங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தன.

சூலை 31-ஆம் பக்கல் நள்ளிரவில் உருசிய ஒற்றுத்துறைக் காவலர்கள் இந்திய இளைஞர் ஒருவரைக் கைத்தாங்கலாக அழைத்துக்கொண்டு அந்த விடுதிக்கு வருகின்றார்கள். அந்த இளைஞர் குடி மயக்கத்தில் தன் நினைவின்றி அலங்கோலமாகக் கிடக்க, அவரது அறையைக் காவலர் ஆய்வு செய்கின்றார்கள்.

அறைக்குள் இருந்த ஒருவர் கேட்கிறார்—ஏன் இந்த ஆய்வு?' என்று.

'ஒன்றுமில்லை உருசியாவில் கிடைக்காத வெறி (போதை)ப் பொருள் ஒன்றால் உங்கள் தலைவர் மயங்கிக் கிடக்கிறார். அந்தப் போதைப் பொருளைத் தேட வேண்டிய கட்டாயத்தில் நாங்கள் இருக்கின்றோம், மன்னிக்கவும்'.

தொடர்ந்து அந்த அறை ஆய்வு செய்யப்படுகிறது.

வெறி மயக்கத்தில் கிடந்த அந்தத் தலைவர் யார் தெரியுமா? இளைஞர் பேராயத்தின் [காங்கிரசின்] இந்தியத் தலைவர் ஆனந்த்சர்மா பாராளுமன்ற உறுப்பினர்தாம்! இவரைத்தாம் இந்தியாவிலிருந்து உருசியாவுக்குச் சென்ற குழுவிற்குத் தலைவராகவும் தேர்ந்தெடுத்திருந்தனர்!

குருவே இந்த நிலையில் இருந்திருந்தால் மாணவர்கள் எப்படி இருந்திருப்பார்கள்? மூன்று இளைஞர் பேராய உறுப்பினர்களை, ஐநூறு பேர் கொண்ட இந்தியக் குழுவில் இருந்து பிரித்து அடர்ந்தகாடுகள் நிறைந்த மறைவிடம் ஒன்றில் உருசியக் காவலர் அடைத்து வைத்திருக்கிறார்கள். இவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்று கேட்கிறீர்களா? அவர்கள் அங்கே எதுவும் செய்யவில்லை. இங்கேயே பெண் நோயை [வி.டி.] வாங்கிக்கொண்டு அங்கே போயிருக்கிறார்கள், அவ்வளவுதான்.

இளைஞர் பேராயம் மட்டுமா போனது? எல்லா இந்திய அரசியல் கட்சிகளிலிருந்தும்தாம் போனார்கள்! மூன்று யுவசனதா இளைஞர்களை உணவு விடுதி அருகில் இருந்த 'பொருட்களை ஆசையோடு எடுத்ததற்காக' உருசியக் காவலர் பிடித்துத் தள்ளிக்கொண்டும் போனார்கள்.

ஐநூறு பேர் கொண்ட இந்தியக் குழுவில் பேராயக் கட்சியின் சார்பில் 225 பேர்களும், வலது பொதுவுடைமை இடது பொதுவுடைமை, சனதா கட்சிகள் சார்பில் தலைக்கு 49 பேரும்; பேராயம் [எசு] சார்பில் 48 பேரும்; லோக்தளம் சார்பில் 17 பேரும்; தி.மு.க., அ.தி.மு.க., தெலுங்குதேசம் கட்சிகளின் சார்பில் 17 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் போனார்கள்.

இரண்டாவது உலகப்போருக்குப் பிறபட்டவர்களான இளைஞர்களுக்குப் போர்க் கொடுமையை வலியுறுத்தவும், உலக அமைதியின் தேவையை உணரச்செய்யவும், உருசியாவில் நடத்தப்பட்டது, இந்த 12 ஆவது உலக இளைஞர் விழா.

இதில் கலந்துகொள்ளப்போன நமது 'இளைய பாரதத்தின் நடவடிக்கைகள்'தாம் இன்று உலகம் முழுவதும் செய்தித்தாள்களில் 'சந்தி சிரிக்கின்றன'.

இளைஞர் பேராயம் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களில் பேராயக்கட்சிக்கே தொடர்பில்லாத பலர் இருந்திருக்கிறார்கள். பெண்களில் பலர் 'நடத்தை கெட்டவர்கள்' என்றால் நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிக்கொள்ளுங்கள்.

இரவு பகலாகக் குடித்துவிட்டுப் பெண்களை இழுத்துக்கொண்டு அலைந்த இவர்களை கட்டுப்படுத்த உருசியக் காவலர்கள் மோப்ப நாய்களோடு மாசுக்கோ நகரப் பூங்காக்களின் மறைவிடங்களில் நின்றார்கள், செயல்கள் மீறப்படும்பொழுது நாய்கள் பாய்ந்து வந்து இந்திய இளைஞர்களிடமிருந்து பெண்களை பிரித்திருக்கின்றன.

இந்தியாவின் நேச நாடுகளில் ஒன்றான இலத்தின் அமெரிக்கப் பெண்கள் இந்திய இளைஞர்களிடம் வெகுளித்தனமாகப் பழகப்போக, வந்தது தீங்கு!

மாசுக்கோ கடைத்தெருக்களில் கழுத்துச் சட்டைப் பட்டியில் கைக்குட்டை வைத்துக்கொண்டு அலைந்த சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட 17 பேரைக் காவலர் பிடித்து மாசுக்கோவை விட்டே வெளியேற்றி விட்டார்கள்.

கைக்குட்டை மருமம் என்ன என்பதை இறுதி வரை மாசுக்கோ காவலர் வெளியே விடவில்லை.

இந்தியத்தூது குழுவுக்குத் தலைமைதாங்கிச் சென்ற இளைஞர் பேராயக்கட்சியின் அனைத்து இந்தியத் தலைவரான ஆனந்த் சர்மா இந்தியாவில் ஒரு பெண்ணோடு கட்டிப்பிடித்த நிலையில் இருந்த புகைப்படத்தைக் காண்பித்து மிரட்டியிருக்கின்றனர் இளைஞர் பேராயத்தின் பெயரால் மாசுக்கோ போயிருந்த 'நண்பர்கள்' சிலர்!

இந்திராப் பேராயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரின் நிலையைப் பாருங்கள்.

இத்தகைய அவமானங்களுக்கெல்லாம் தலையாய செய்தியையும் தெரிந்துகொண்டுவிடுங்கள்.

உலக இளைஞர் விழாத்தொடக்க நாள் அன்று பெரிய பேரணி ஒன்று நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாட்டு இளைஞர்களும் தங்கள் நாட்டுக் கொடி முன்னே பறந்து செல்ல, பின்னே சென்றிருக்கிறார்கள்.

இந்தியக் குழுவின் சார்பாக இந்திய தேசியக் கொடியை சாபர் இக்பால் என்ற இளைஞர் பிடித்துக் கொண்டுபோயிருக்கின்றார். அந்தக் கொடியில் இருந்த அசோக சக்கரத்தின் குறுக்குக் கோடுகள் 24 இருப்பதற்கு பகரமாக 16 மட்டுமே இருந்திருக்கின்றன.

எப்படி இந்தப் பெரிய தவறு நடந்தது?

இந்தியாவில் இருந்து சென்ற தூதுக் குழு தேசியக் கொடியைக் கொண்டு போகவே இல்லை. பேரணி நடப்பதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்தான் குழுவிற்குத் தலைமை தாங்கிய இளைஞர் பேராய பா.உ. ஆனந்த் சர்மாவுக்கு இப்படிப்பட்ட தூதுக் குழுக்களாகப் போகும் பொழுது தேசியக் கொடி கொண்டுபோக வேண்டும் என்ற நெறிமுறையே தெரிய வந்ததாம்.

தலையெழுத்தே என்று அலைந்து இந்திய தூதரகத்திற்கு போனால், அங்கும் இருந்தது ஒரு கிழிந்த கொடிதானும். கடைசியில் விரைவு விரைவாகத் தேசியக் கொடி அணியப்படுத்தப் பட்டிருக்கிறது. அசோகச் சக்கரம் வரையச் சொன்ன நம் இளைஞர்களுக்கு அதில் எத்தனைக் கோடுகள் இருக்கும் என்பது தெரியாததால் 24 கோடுகள் 16 ஆகக் குறைந்துவிட்டன.

ஊர்வலத்தில் நமது தேசியக் கொடியின் நிறம் மங்கலாகத் தெரிந்திருக்கிறது. சாயம் வெளுத்துப் போன மாதிரியும் இருந்திருக்கிறது.

வாழிய (வெட்கக்கேடான) பாரத மணித் திருநாடு! நன்றி-'தராசு'

ஒன்றுபடும் கூறுகள்!

நம் தமிழரிடையே பிளவுணர்ச்சிகள் உள்ளன. அவை 'சாதி'யால், மதத்தால், பணத்தால் ஏற்படுவன. அவரிடையே ஒன்றுபடும் கூறுகள் உள்ளன. அவை தமிழின எழுச்சியால் நிகழ்வன. இவை மயக்கம் சார்ந்தவை; அறியாமை உடையவை. என்றாலும் ஒன்றுபடும் கூறுகளின் அடையாளம் வாய்ந்தவை.

எழுபது அகவைப் பெரியவர் முதுகுளத்தூர் பகுதிக்காரர். அவர் பெயர் முத்துப்பக்கிரி. அவ்வாறே, எண்பது அகவையைத் தொடவுள்ள ஒருவரின் பெயர் முகமதுகனி சேர்வை. இருவரும் தமிழர். சமயம், மத உணர்வினால், முன்னவர் சைவர், (இந்து). பின்னவர் முசுலீம்!

இவர்கள் 'சாதி'யை விடவில்லை; மதத்தைப் பொருட்படுத்தவில்லை. இணைந்தே வாழ்கின்றார்கள். கிறித்தவ மதத்தில் இதனைப் பரக்கக் காணலாம். இவ்வாறிருக்க 'இந்து முன்னணி' ஆட்டம் போடுவது ஏன்? இவர்களின் 'நுழைவினால்' சமயவுண்மைகள் ஒன்றுபடுதல் போய், சமயப்பகை 'பழையபடி' வரலாற்றிற்கு எதிராக உருவாக்கப்பட்டு வருகின்றது.

மக்களிடம் 'ஒன்றுபடும் கூறுகளை' வளர்த்தெடுத்தல் வேண்டும். அவை இயல்பு சார்ந்திருத்தல் வேண்டும். 'தமிழ்' ஒன்றுபடுத்த உதவும். தமிழினம் அப்படிப்பட்டது. இவற்றுடன் உருவாக்கப்பட்டுச் சிதைந்து வரும் சாதியவுணர்வுகளைத் தூக்கி நிறுத்துதல் கூடாது!

போலியான ஒருமைப்பாடு. இந்திய ஒற்றுமை பேசி, மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியைப் புடைகொண்டு ஒடுக்குகின்ற அரசின் கொடிய செயல்களை எதிர்த்தாலன்றி ஒற்றுமைக் கூறுகள் வலுப்படுதல் இயலாது போகும்! — பறம்பை அறிவன்

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5 மணிக்குமேல் முன் இசைவு பெற்று வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- அமைச்சர்

அண்ணாவும் தம்பியும்

"அண்ணா!"

"என்ன தம்பி?"

"தமிழ் ஈழத் தலைவர் மூவர் நாடு கடத்தப்பட்டதைக் கண்டித்து, தமிழகத்தில் நடைபெற்ற பேரணிகளும், தொடர்வண்டி நிறுத்தப் போராட்டமும் வெற்றிதானே?"

"அதில் என்ன ஐயம்? தமிழ்நாட்டில் கொஞ்ச காலமாகத் தாழ்வாகப் பறந்துகொண்டிருந்த தமிழ் ஈழக்கொடி, இப்பொழுது உயரப் பறக்கத் தொடங்கிவிட்டது. அதற்கு, நடுவண் அரசின் குழப்ப நடவடிக்கையே காரணம் என்று ஆங்கில நாளேடு ஒன்றே எழுதியிருக்கிறதே!"

"அதே நாளேட்டின் ஆசிரிய உரையில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறதே பார்த்தீர்களா அண்ணா?"

"என்ன தம்பி?"

"இரயில் நிறுத்தப் போராட்டமும், பேரணிகளும் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொல்லையையே கொடுத்திருக்கின்றன என்று குறிப்பிடப்பட்டுள்ளதே!'?

"ஆமாம்"

"இந்திரா காந்தி மறைவு போன்ற நிகழ்ச்சிகளின்போது, இரண்டு நாட்கள் கூட எந்தப் போக்குவரத்தும் இல்லாமல் எந்தக் கடையும் இல்லாமல் இருந்திருக்கின்றனவே, அப்போதெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொல்லையே இருந்திராதோ? அந்த ஆங்கில நாளேடு அப்போது ஏன் இப்படி எழுதவில்லையோ?"

"எனக்குத் தெரியாது தம்பி!"

தமிழ் பாடும் தோழர்காள்....

புலவர் திருக்குறள் நாவை சிவம், (க.மு.) கல்.இ.

தமிழ்பாடும் தோழர்காள்!
தகைசான்ற ஆளர்காள்!
நிமிர்ந்தவரும் சாதியெலாம் போக்குவோம்! -இங்கு
நிலவிவரும் மடமையெலாம் நீக்குவோம்!

இல்லாமை, கல்லாமை
இயலாமை எனுந்துயர்கள்
இல்லாமல் செய்வதற்கே பாடுவோம்! -இதை
எதிர்ப்பவர்கள் யாவரையும் சாடுவோம்!

பாடுபடும் ஏழையரின்
பசிவயிறு காணாதே
மாடிவிட்டு முதலர்களைத் தாழ்த்துவோம்! -அவர்
மனம்வருந்தித் திருந்திவிட்டால் வாழ்த்துவோம்!

ஊரையெல்லாம் ஏமாற்றி
உயர்கொள்ளை அடிப்பவனை
ஊரைவிட்டே ஓட்டுதற்குச் செய்குவோம்!-மக்கள்
உண்பொருளை மாற்றுவோனைக் கொய்குவோம்!

குறிக்கோளே இல்லாமல்
குமைந்துபோகும் மக்களினை
அறிவினிலே விருப்புகொள்ளச் செய்குவோம்!-அந்த
அறப்பணியின் இன்பத்திலே உய்குவோம்!

அருங்கலைகள் எனும்பெயரால்
அருவருப்பை வளர்த்துவரும்
திரைப்படங்கள், செய்திஇதழ் தூற்றுவோம்!-அவை
திருந்திடவே நல்லுணர்வை ஏற்றுவோம்!

செந்தமிழின் சீர்மையினை
சிறிதேனும் எண்ணாமல்
வந்தமொழி காப்பவரை மாற்றுவோம்! -சில
வயிறுபேணும் கும்பலையும் தேற்றுவோம்!

பண்டுதமிழ்ப் பெருமை ஒன்றே
பாடுவதை விட்டுவிட்டுத்
தண்டமிழ்த்தாய் நலம்பேணக் கிளம்புவோம்!-குறள்
தருகின்ற நெறியெங்கும் விளம்புவோம்!

தமிழினத்தை மேம்படுத்தித்
தமிழ்நிலத்தை மீட்டெடுத்துத்
தமிழாட்சி செய்வதற்கே எண்ணுவோம்! இதைத்
தலைப்பணியாய் நாமுனைந்து பண்ணுவோம்!

பொதுமை நாட்டில் பூப்பதற்குப்
பொலியுமின்பம் ஓங்குதற்குப்
புதுமைசெய்வோம் ஓடிவாரீர் தோழர்காள்! -அறிவுப்
புரட்சிசெய்வோம் ஓடிவாரீர் தோழர்காள்! 0

தமிழர்கள் தமிழால் ஒன்றுபடுக! ஓரினமாகுக!

தொடர்: 4.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தமிழீழம் விடுதலை பெறுமா? வழியென்ன?

- மலர்மாறன் -

வெளி உலகிற்குத் தெரியாமலேயே வேலை செய்யத் தொடங்கியது மேற்கு வங்க மாநில அரசு. துடித்தெழுந்த வங்க இளைஞர்களுக்குத் துமுக்கிச் சுடும் பயிற்சி கொடுத்தார்கள். தங்களின் காவல் படையினரையும், பழைய வீரர்களையும் சேர்த்தார்கள். 'முக்தி பாகினி' என்ற தொண்டர் படையை அமைத்தார்கள்.

வெளி உலகிற்குத் தெரியாமலேயே அந்தத் தொண்டர் படை கிழக்கு வங்க மாநிலத்திற்குள் நுழைந்தது; கிழக்கு வங்க மக்களுடன் இணைந்தது. மேற்குப் பாக்கிசுதான் படை வீரர்களை எதிர்த்துப் போராடியது; வெற்றியும் பெற்றது.

தனி பங்களா தேச அரசை அமைத்து உலகிற்கும் அறிவித்தது. உலக நாடுகள் தங்களது அரசமைப்பை ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது.

பங்களா தேசத்தை இந்திய அரசு ஏற்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள, பாசானி போன்ற பங்களா தேச மூத்த தலைவர்கள் இந்தியாவிற்கு வந்தார்கள். இந்தியத் தலைமை அமைச்சராக இருந்த இந்திரா காந்தியை நேரில் கண்டு, தங்கள் பங்களா தேசத்தை உடனே ஏற்கும்படி வேண்டிக் கொண்டார்கள்.

அவர்களின் வேண்டுதல் வெற்றி பெறவில்லை. இந்திரா காந்தி பங்களா தேச அரசை ஏற்புச் செய்யவில்லை.

இதற்குப் பிறகு மேற்குப் பாக்கித்தான் அரசு, கிழக்கு வங்கத்திற்குள் ஓர் இலக்கம் படை வீரர்களைக் கொண்டு வந்து குவித்தது.

கிழக்கு வங்காளம் மறுபடியும் மேற்குப் பாகித்தானின் படைப் பிடிக்குள் சிக்கியது,

மேற்குப் பாக்கித்தான் படையினர் வங்காள தேச மக்களைப் படுகொலைகள் செய்தனர்; பெண்களைக் கற்பழித்தனர். வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

அவர்களின் கொடுமைகளைத் தாங்கமாட்டாத கிழக்கு வங்க மக்களில் 100 இலக்கம் பேர் இந்தியாவிற்குள் ஏதிலிகளாக வந்தனர்.

போராட்டம் தொடங்கிக் கிட்டத்தட்ட 10 மாதங்கள் கழிந்துவிட்டன. அதன் பின்னர்தான் இந்திய அரசு பங்களா தேசச் சிக்கலில் தலையிட்டது.

இந்திய அரசு பங்களா தேசத்திற்குள் நுழைந்தது. இந்தியப் படையை எதிர்த்து நிற்க முடியாமல், படைத்துறைப் பாசறைகளில் பாக்கித்தான் படையினர் பதுங்கிக் கொண்டார்கள்.

இந்தியப் படை அவர்களை முற்றுகையிட்டுக் கீழ்ப்படியும்படி எச்சரிக்கை கொடுத்தது.

பாக்கித்தானுக்கும் அமெரிக்காவிற்கும் படைத்துறை ஒப்பந்தம் இருந்தது. இந்தியப் படை கிழக்குப் பாக்கித்தானுக்குள் நுழைந்தவுடன் பாக்கித்தானுக்கு ஆதரவாகப் போரிட அமெரிக்கப் படை கிழக்கு வங்கத்திற்கு வந்தது. இந்தியாவிற்கு ஆதரவாக, அமெரிக்கப்படையை எதிர்த்துப் போரிட உருசியப்படை வங்க தேசத்தை நோக்கி விரைந்து வந்தது.

இதற்கிடையில் பாக்கித்தானும் ஓர் இலக்கம் படை வீரர்களும், இந்தியப் படையை எதிர்த்து நிற்கமுடியாமல் கீழ்ப்படிந்தனர்.

பங்களா தேச ஆட்சியை மீண்டும் அமைத்துக், கிழக்கு வங்க மக்களிடம் அதைக் கொடுத்துவிட்டு, இந்தியப் படை இந்தியாவிற்குத் திரும்பிவிட்டது.

அமெரிக்கப் படையும், உருசியப் படையும் போரில் ஈடுபடாமலேயே திரும்பிச் சென்றுவிட்டன.

பங்களா தேசம் அமைக்க ஏற்பட்ட போராட்டத்தில் கிட்டத்தட்ட 10 மாதங்கள் கழிந்துதான் இந்தியப் படை தலையிட்டது. அதற்கு முன்னர் மேற்கு வங்க மாநில 'முக்தி பாகினி' என்ற தொண்டர் படையை அமைத்து, உலகிற்குத் தெரியாமலேயே பங்களா தேசத்திற்குள் அனுப்பி, அங்குள்ள மக்களுடன் இணைந்து போராடி வெற்றி பெற்றுப், பங்களா தேசத்தை முதலில் அமைத்து, அந்த அமைப்பை உறுதி செய்தது. 10 மாதம் கழித்து நுழைந்த இந்தியப் படை.

இந்த வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால், ஈழத் தமிழ் நாடு சிக்கலில் தமிழக அரசு என்ன வழியைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

மேற்கு வங்கத்திலும், கிழக்கு வங்கத்திலும் வாழும் மக்கள் வங்க மொழியைப் பேசுபவர்கள். மதத்தால் அவர்கள் மாறுபட்டு இருந்தாலும், இனத்தால் அவர்கள் வங்காளிகள் என்றுதான் கருதப்படுகிறார்கள்.

இந்தியா, பாக்கித்தான் என்ற இரண்டு நாடுகளில் வாழ்ந்தாலும், தாங்கள் ஒரே இன மக்கள் என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. இன்றும் இருக்கின்றது. ஆகவேதான் கிழக்கு வங்க மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டுப் படுகொலைகள் செய்யப்பட்டவுடன் மேற்கு வங்க மக்கள் கொதித்தெழுந்தார்கள்.

மேற்கு வங்க மாநில அரசு 'முக்தி பாகினி'யை அமைத்துச் சரியான செயலில் இறங்கியது. கட்சி வேறுபாடுகளை மறந்து மேற்கு வங்க மக்கள் அதற்குப் பக்க வலுவாக இருந்தனர்.

அதே போன்ற நிலையில்தான் இலங்கைத் தமிழ் மக்களும், தமிழகத் தமிழ் மக்களும் இருக்கிறார்கள். தமிழக, இலங்கை என்ற இரண்டு நாடுகளில் வாழ்ந்தாலும் தாங்கள் ஒரே இன மக்கள் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். ஈழத் தமிழ் மக்கள் சிங்களக் காட்டு விலங்காண்டிகளால் கொடுமைப் படுத்தப்படுவது கண்டு கொதித்து எழுந்துள்ளனர்.

தமிழக அரசு என்ன செய்துகொண்டு இருக்கின்றது?

'முக்தி பாகினி' போன்ற தமிழ் ஈழ விடுதலைத் தொண்டர் படையைத் தமிழக அரசு அமைக்கவில்லையே. சரியான செயலில் தமிழக அரசு இறங்கவே இல்லையே.

சரியான முயற்சியில் இறங்காதது மட்டுமன்று; தமிழக மக்களைத் திசை திருப்பி ஏமாற்றும் முயற்சியில் அன்றோ ஈடுபட்டுள்ளது.

கிழக்கு வங்க மக்கள் கொடுமைப்படுத்தப்பட்டவுடன், மேற்கு வங்க அரசு செயலில் இறங்கியது.

முக்தி பாகினி தொண்டர் படையை அமைக்க மத்திய அரசின் அனுமதியைக் கேட்கவுமில்லை; தங்கள் ஆட்சியை நடுவணரசு கவிழ்த்து விடுமோ என்று அச்சப்படவுமில்லை.

அமெரிக்கப் படை வந்துவிடும், உலகப்போர் தொடங்கிவிடும் என்று உதவாக்கறைப் பேச்சுகளைப் பேசிக்கொண்டிருக்கவில்லை.

தன் உடன்பிறந்தவர்களும், அக்கை - தங்கைகளும் அழிக்கப்படும்போது, மற்றவற்றைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை.

எது இருந்தால் என்ன? இல்லாமல் போய்விட்டால் என்ன? எது நடந்தால் என்ன? நடக்காமல் போய்விட்டால் என்ன? தங்களது இனம் தாக்கப்படுவதுதான் முதன்மையானது என்று துணிந்து செயலில் இறங்கியது மேற்கு வங்க அரசு. 'முக்தி வாகினி' தொண்டர் படையை அமைத்து முதல் வெற்றியைப் பெற்றது.

கருவிகளற்ற தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப் படுவதைப் பார்த்துத் தமிழக அரசு சரியான செயலில் ஈடுபடவில்லை. 'முக்தி பாகினி' போன்ற, தமிழ் விடுதலைப் படையை அமைத்துச் செயலில் இறங்கவில்லை.

மாறாக, கடையடைப்புகளையும், கண்டனக் கூட்டங்களையும், கருப்புச் சட்டை அணிவதையும், தொகைத் தண்டல் செய்வதையும் செய்துகொண்டிருக்கின்றது தமிழக அரசு,

இதை ஓர் அரசா செய்யவேண்டும்? அரசியல் கட்சிகளும், குமுகத் தொண்டு நிறுவனங்களும், செஞ்சிலுவைக் கழகங்களும் மாதர் கழகங்களும் இச் செயல்களைச் செய்துவிடுமே.

ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்துகொண்டிருக்கும், சிங்களக் காட்டுவிலங்காண்டிகளின் கொட்டத்தை அடக்கவல்ல அரசு அமைப்பைக் கையில் வைத்துள்ள தமிழக ஆட்சியினர், அரசின் ஆற்றலை இப்படியெல்லாம் வீணடித்துக் கொண்டிருக்கவேண்டுமா?

ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற சரியான செயலில் ஈடுபடாமல், தமிழக மக்களை ஏமாற்றும் முயற்சிகளில் தமிழக அரசு ஈடுபடக் காரணம் என்ன?

தமிழகத்தின் முதலமைச்சராக தமிழன் ஒருவன் இல்லை. அதனால் தமிழனைக் காப்பாற்றுவதில் தமிழக அரசுக்கு அக்கறை இல்லாது போய்விட்டது. இதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்கின்றது?

தமிழக அரசின் முதலமைச்சராக தமிழன் ஒருவன் இருந்திருந்தால், தமிழ் ஈழ விடுதலைத் தொண்டர் படை எப்போதோ அமைக்கப்பட்டிருக்கும். ஈழத் தமிழர் மீது இழைக்கப்படும் கொடுமைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும்.

இலங்கைத் தீவிற்குள் தமிழக அரசு தொண்டர் படையை அனுப்பி, அங்கே நடந்துகொண்டிருக்கும் நேர்மையான ஆட்சியைக் கவிழ்த்துவிட வேண்டுமென்று நாம் கேட்கவில்லை. காட்டு விலங்காண்டி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் இலங்கை ஆட்சியிலிருந்து தமிழர்களைக் காப்பாற்றி, அவர்கள் காப்பாக வாழ, ஈழத்தமிழ் நாட்டை அமைத்துக் கொடுக்கத்தான் தொண்டர் படையை அனுப்ப வேண்டுமென்று கூறுகின்றோம்.

இதை உலகத்தில் உள்ள எந்த நயமான நாடும் தவறு என்று சொல்லாது. வன்கவர்பு செய்ய அன்று; கொடுமைப்படுத்தப்பட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஈழத் தமிழ் இனத்தைக் காப்பாற்றத்தான் தொண்டர் படையை அனுப்ப வேண்டும் என்று நாம் சொல்கிறோம்.

இலங்கை அரசு ஒரு சுண்டைக்காய் அரசு. ஈழத்தமிழ் விடுதலைப் புலிகளுக்குப் போதுமான கருவிகள் கிடைக்கச் செய்துவிட்டால், அவர்களைக் கூட எதிர்க்க முடியாத கோழைகளைக் கொண்டதுதான் இலங்கைப் படைத்துறை.

மேற்கு வங்க அரசு 'முக்தி பாகினி' தொண்டர் படையை அனுப்பி வைத்ததுபோல, தமிழக அரசு "தமிழ் ஈழ விடுதலைத் தொண்டர் படை"யை மறைமுகமாக இலங்கைத் தீவிற்குள்ளே அனுப்பினால் ஈழத் தமிழ்நாட்டை அமைத்துத் தமிழ் மக்களைக் காப்பாற்றிவிட முடியும்.

இலங்கைப் படைத் துறையினரின் அட்டூழியங்களை அடக்க இந்தியப்படை வரவேண்டிய தேவையில்லை. நமது தொண்டர் படையே அவற்றைக் கவனித்துக் கொள்ளும்.

இலங்கை அரசை ஆதரித்து அமெரிக்கா படை கொண்டுவந்தால் அப்பொழுது இந்தியப் படை தலையிட்டால் போதும்.

தமிழ் மக்களைக் காப்பாற்றத்தான் தமிழக அரசு இருக்கின்றது. கொல்லப்படும் தமிழர்களைக் காப்பாற்றும் கடமையைச்செய்யவில்லையென்றால் தமிழக அரசு என்று ஒன்று இருந்தென்ன; இல்லாமல் போய்விட்டால்தான் என்ன?

தமிழர்களின் உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றத்தான், தமிழக ஆட்சிப்பொறுப்பை மா. கோ. இராமச்சந்திரனிடம் கொடுத்துள்ளார்கள், தமிழ் மக்கள்.

கொல்லப்படும் தமிழர்களைக் காப்பது நமது கடமையன்று; அது நடுவண் அரசின் கடமை என்று மா. கோ. இராமச்சந்திரன் கூறுவார் என்றால், அவர் ஏன் தமிழகத்தின் முதல் அமைச்சராக இருக்க வேண்டும்? உடனே தமிழ் உணர்வுள்ள தமிழர் ஒருவரிடம் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து விட்டுக் கீழே இறங்கி விடுவதுதான் அவர் செய்யும் சாலச் சிறந்த செயலாக இருக்கும்.

(தொடரும்).

த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்:

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.
- சாதியற்ற, மதவேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.
- இழிவுகளும் பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.
- மனம், அறிவு, வாழ்க்கை -இவற்றை வளப்படுத்தவும் நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.
- பழந்தமிழ் மரபுக்கும் மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.

கழக அருளாளர்: தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள்:
தென்மொழி ந. முத்துக்குமரன், பல்லடம் மா. ஆறுமுகம்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும். [இதழ் எண்: 67] பதிவு எண் TN/MS (C)/657

அனுப்புதல்:
தமிழ் நிலம்
5. அருணாசலத் தெரு.
திருவல்லிக்கேணி
சென்னை—5

பெறுநர்.
திரு/திருவாட்டி

நூல்-அஞ்சல்

உறுப்பினர்
ஆண்டுக்கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.